## ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்டத்தை

# சிதம்பரத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் இன்று தொடங்கி வைக்கிறார்!

## நாளை மயிலாடுதுறை மாவட்டத்தில் நலத்திட்ட உதவிகளை வழங்குகிறார்!

**சிதம்பரம், ஜூலை 15-**

**‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்டத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று சிதம்பரத்தில் தொடங்கி வைக்கிறார். நாளை மயிலாடுதுறை மாவட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலை, திறப்பு மற்றும் அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் பங்கேற்று உரையாற்றுகிறார்.**

சென்னை தாம்பரத்தில் இருந்து நேற்று (14.7.2025) மாலை பாம்பன் - ராமேசுவரம் விரைவு ரயில் மூலம் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சிதம்பரம் வருகை தந்தார். அவருக்கு கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. மற்றும் சிதம்பரம் நகர தி.மு.க. சார்பில், மாவட்டச் செயலாளரும், அமைச்சருமான எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் கழக நிர்வாகிகள் சிறப்பான வரவேற்பு அளித்தனர். தொடர்ந்து, சிதம்பரத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், திங்கள்கிழமை இரவு தங்கினார்.

### ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்டம் தொடக்கம்!

இதையடுத்து, காமராஜர் பிறந்த நாளையொட்டி, சிதம்பரம் அரசுப் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் இன்று (15.7.2025 - செவ்வாய்க்கிழமை) காலை 9 மணியளவில் நடைபெறும் நிகழ்ச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று காமராஜர் உருவப் படத்துக்கு மாலை அணிவித்து, மரியாதை செலுத்துகிறார்.

தொடர்ந்து, ரயில்வே மேம்பாலம் கீழே உள்ள தனியார் திருமண மண்டபத்தில் (ஜி.எம்.வாண்டையார் திருமண மண்டபம்) ‘உங்களுடன் ஸ்டாலின்’ திட்டத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைக்கிறார். பின்னர், சிதம்பரம் நகர காவல் நிலையத்தைப் பார்வையிட்டு ஆய்வு செய்கிறார்.

### எல்.இளையபெருமாள் சிலையுடன் கூடிய நூற்றாண்டு அரங்கம் திறப்பு!

மேலும், சிதம்பரம் அண்ணாகுளம் அருகில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அம்பேத்கர் சிலையை திறந்து வைக்கிறார்.

தொடர்ந்து, சிதம்பரம் புறவழிச் சாலையில் லால்புரத்தில் ரூ.6.39 கோடியில் அமைக்கப்பட்டுள்ள மறைந்த காங்கிரஸ் மூத்த தலைவர் எல்.இளையபெருமாள் முழு உருவச் சிலையுடன் கூடிய நூற்றாண்டு அரங்கத்தை முதல்வர் ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்து, அருகே அமைக்கப்பட்டுள்ள விழா மேடையில் சிறப்புரையாற்றுகிறார்.



### மயிலாடுதுறை மாவட்டத்தில் மாபெரும் வரவேற்பு!

தொடர்ந்து, கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (15.7.2025) மதியம் சிதம்பரத்திலிருந்து மயிலாடுதுறை மாவட்டத்திற்கு வருகை தர உள்ளார்.

மயிலாடுதுறை மாவட்டத்திற்கு வருகை தரும் கழகத் தலைவர்- முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மயிலாடுதுறை மாவட்ட எல்லையான கொள்ளிடத்தில் மயிலாடுதுறை மாவட்டக் கழகம் சார்பில் மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா முருகன் எம்.எல்.ஏ., தலைமையில் மாபெரும் வரவேற்பு அளிக்கப்பட உள்ளது.

### முத்தமிழறிஞர் கலைஞர் திருவுருவச் சிலைகள் திறப்பு!

தொடர்ந்து, கொள்ளிடம் மேற்கு ஒன்றியம் கொள்ளிடம் புறவழிச் சாலையில் அமைக்கப்பட்டுள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருஉருவச் சிலையை திறந்துவைத்து கழகக் கொடி ஏற்றி வைக்கிறார்.

அதைத் தொடர்ந்து திருவெண்காடு சென்று அங்கிருந்து மாலை சீர்காழி கிழக்கு ஒன்றியம், செம்பதனிருப்பில் அமைக்கப்பட்டுள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் சிலையை திறந்து வைக்கிறார்.

### 4 கிலோ மீட்டர் தூரம் ரோடு ஷோ!

அதைத் தொடர்ந்து கருவி, கீழையூர், வழியாக மயிலாடுதுறை செல்லும் கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மணக்குடி அருகே பாலாஜி நகரிலிருந்து பொதுமக்களைச் சந்திக்கும் வகையில் சுமார் 4 கிலோ மீட்டர் நடந்து (ரோட் ஷோ) கால் டாக்ஸி, மணிக்கூண்டு, சின்ன கடை தெரு, வழியாக கச்சேரி சாலையில் வட்டார வளர்ச்சி அலுவலகம் வழியாக அண்ணா பகுத்தறி மன்றம் சென்று, அங்கு அமைக்கப்பட்டுள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் சிலையை திறந்து வைத்து கழகக் கொடியை ஏற்றி வைக்கிறார்.

### மயிலாடுதுறையில் அரசு நலத்திட்ட உதவிகள்!

அதைத் தொடர்ந்து நாளை (16ஆம் தேதி) காலை குத்தாலம் கிழக்கு ஒன்றியம் வழுவூரில் அமைக்கப்பட்டுள்ள முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் சிலையை திறந்து வைத்து கழகக் கொடியை ஏற்றி வைக்கிறார்.

பின்னர் மயிலாடுதுறை ஏ.வி.சி. கல்லூரியில் நடைபெற உள்ள அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பங்கேற்று நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரை ஆற்றுகிறார்.

இவ்விழாவில் அமைச்சர் பெருமக்கள், சட்டமன்ற - நாடாளுமன்ற உறுப்பினர்கள், கழக முன்னணியினர், அரசு அதிகாரிகள் ஏராளமானோர் பங்கேற்கின்றனர்.

---

## அரசின் திட்டங்களை முறையாக மக்களிடம் எடுத்துரைக்க

# அரசு செய்தித் தொடர்பாளர்களாக 4 மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் நியமனம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, ஜூலை 15 -**

**தமிழ்நாடு அரசுத் துறைகளின் முக்கிய தகவல்கள், திட்டங்கள் மற்றும் தேவையான இனங்களில் செய்தி ஊடகங்கள் மூலமாக சரியான நேரத்தில் பொதுமக்களுக்கு எடுத்துரைப்பதற்கும், பிற அரசு துறைகளுடன் ஒருங்கிணைப்பதற்கும் மூத்த இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகளை அரசு செய்தித் தொடர்பாளர்களாக அரசு நியமிக்கிறது.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாடு அரசுத் துறைகளின் முக்கிய தகவல்கள், திட்டங்கள் மற்றும் தேவையான இனங்களில் செய்தி ஊடகங்கள் மூலமாக சரியான நேரத்தில் பொதுமக்களுக்கு எடுத்துரைப்பதற்கும், பிற அரசு துறைகளுடன் ஒருங்கிணைப்பதற்கும், கீழ்க்கண்ட மூத்த இந்திய ஆட்சிப் பணி அதிகாரிகளை அரசு செய்தித் தொடர்பாளர்களாக நியமித்துள்ளார்கள்.

1. **டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன்,** அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மின்சார வாரியம்.

2. **ககன்தீப் சிங் பேடி,** அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை.

3. **தீரஜ் குமார்,** அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை

4. **திருமதி. பெ. அமுதா,** அரசு கூடுதல் தலைமைச் செயலாளர். வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை

மேற்கண்ட அதிகாரிகள் எந்தெந்த துறை சம்மந்தமாக செய்திகள் வெளியிட வேண்டும் என முதல்வரின் ஆணைப்படி அவர்களுக்கு கீழ்க்காணுமாறு துறைகள் ஒதுக்கப்பட்டுள்ளன:

**டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன்,**

- எரிசக்தித் துறை
- மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை
- போக்குவரத்துத் துறை
- கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை
- வெளிநாடு வாழ் தமிழர் நலன்
- பள்ளிக் கல்வித் துறை
- உயர்கல்வித் துறை
- கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர்த் துறை
- மனிதவள மேலாண்மைத் துறை

**ககன்தீப் சிங் பேடி,**

- நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
- ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சித் துறை
- கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை
- வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை
- நீர்வளத் துறை
- சுற்றுச் சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை
- குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை
- தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை
- இயற்கை வளங்கள் துறை

**தீரஜ் குமார்**

- உள், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறை

**திருமதி. பெ. அமுதா,**

- வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை
- சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை
- மாற்றுத் திறனாளிகள் நலத் துறை
- தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை
- ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை
- பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை
- வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை
- நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை
- சுற்றுலா, பண்பாடு மற்றும் சமய அறநிலையத் துறை
- சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறை

அரசு செய்தித் தொடர்பாளர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள துறைகளின் செயலாளர்கள், துறை சார்ந்த அறிவிப்புகள் மற்றும் சாதனைகளின் தகவல்களை அரசு செய்தித் தொடர்பாளர்களுக்கு வழங்குவார்கள். அச்செய்திகளின் உண்மைத்தன்மையை உறுதி செய்தபின் தலைமைச் செயலாளரின் ஆலோசனையின் அடிப்படையில் அரசு செய்தித் தொடர்பாளர்கள் செய்தி ஊடகங்களைச் சந்தித்து தகவல்களை துல்லியமாகவும், சரியாகவும் வெளியிடுவார்கள்.

அரசின் திட்டங்கள் மற்றும் தகவல்களை வேகமாகவும், சரியான தகவல்களை உரிய நேரத்தில் மக்களிடம் கொண்டு சேர்க்கவும் அரசு செய்தித் தொடர்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

---

## திருப்புவனம் வட்டம் – மடப்புரம் கிராமத்தில் மரணம் அடைந்த

# அஜித்குமார் குடும்பத்திற்கு - ரூ 7.50 இலட்சம் நிவாரண நிதிக்கான காசோலை!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பின்படி — அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் நேரில் வழங்கினார்!

**திருப்புவனம், ஜூலை 15-**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவிப்பின்படி, கூட்டுறவுத் துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன்- சிவகங்கை மாவட்டம் - திருப்புவனம் வட்டம், மடப்புரம் கிராமத்தில் மரணம் அடைந்த அஜித்குமார் குடும்பத்தினருக்கு ரூபாய் 07.50 இலட்சம் நிவாரண நிதிக்கான காசோலையினை நேரில் சென்று வழங்கினார்.**

இதுதொடர்பான செய்திக் குறிப்பு வருமாறு :-

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டம், மடப்புரம் கிராமத்தில் மரணம் அடைந்த செல்வன் அஜித்குமார் என்பவரின் குடும்பத்தாரிடம் கடந்த 1.7.2025 அன்று அலைபேசியின் வாயிலாகத் தொடர்பு கொண்டு, தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்து, உரிய சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்வதாகவும், அக்குடும்பத்திற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்து தருவதாகவும் தெரிவித்தார்கள்.

அதனைத்தொடர்ந்து, முதலமைச்சர் அவர்களின் உத்தரவிற்கிணங்க, கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், கடந்த 2.7.2025 அன்று கருணை அடிப்படையிலான பணி நியமன ஆணையினை, மறைந்த அஜித்குமார் சகோதரரான நவீன்குமாருக்கு (வயது 27), சிவகங்கை மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியம் லிட், (காரைக்குடி) டெக்னீசியன் பணியிடத்திற்கென வழங்கினார்.

அக்குடும்பத்தினரின் கோரிக்கைக்கிணங்க மதுரையிலுள்ள ஆவின் நிறுவனத்தில் பணி நியமன ஆணையினை மாற்றி வழங்கிடவும், முன்னதாக இக்குடும்பத்தினருக்கு வழங்கப்பட்ட வீட்டு மனைப் பட்டா தொடர்பாக, மாற்று இடம் வேண்டி விடுக்கப்பட்டுள்ள கோரிக்கை தொடர்பாகவும், உரிய நடவடிக்கைகள் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நிலையில், முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பிற்கிணங்க, கூட்டுறவுத்துறை அமைச்சர் கேஆர்.பெரியகருப்பன், அக்குடும்பத்தினருக்கு ரூபாய் 07.50 இலட்சம் நிவாரண நிதிக்கான காசோலையினையும் நேற்றைய தினம் (14.7.2025) சிவகங்கை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி தலைமையில், மானாமதுரை சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஆ.தமிழரசி ரவிக்குமார் முன்னிலையில் நேரில் சென்று வழங்கி ஆறுதல் கூறி, அக்குடும்பத்தினருக்கு தேவையான அனைத்து உதவிகளையும் வழங்குவதாகத் தெரிவித்தார்.

இந்நிகழ்வின் போது, சிவகங்கை வருவாய் கோட்டாட்சியர் விஜயகுமார், திருப்புவனம் பேரூராட்சித் தலைவர் சேங்கைமாறன், திருப்புவனம் வட்டாட்சியர் (பொ) ரமேஷ் உட்பட பலர் உடனிருந்தனர்.

---

## பல வெற்றிப் படங்களை அளித்த – தென்னிந்தியத் திரையுலகின்


# பழம்பெரும் நடிகை சரோஜாதேவி மறைவு!

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜூலை 15-

“பல வெற்றிப் படங்களை அளித்த தென்னிந்திய திரையுலகின் பழம் பெரும் நடிகை திருமதி சரோஜாதேவி அவர்களின் மறைவு எளிதில் ஈடு செய்ய முடியாத இழப்பு’’ என்று அவரது மறைவு குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.

இதுகுறித்து முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் கூறியிருப்பதாவது:-



**தென்னிந்தியத் திரையுலகின் பழம் பெரும் நடிகையான திருமதி சரோஜாதேவி அவர்கள் மறைந்த செய்தியறிந்து மிகவும் வேதனையடைந்தேன்.**

**நடிகர் திலகம் சிவாஜி கணேசன், மக்கள் திலகம் எம்.ஜி.ஆர், என்.டி.ஆர், ஜெமினி கணேசன் முதலிய உச்ச நட்சத்திரங்களுடன் இணைந்து இரசிகர்களால் இன்றளவும் கொண்டாடப்படும் பல மறக்க முடியாத வெற்றிப் படங்களை அளித்தவர் திருமதி சரோஜாதேவி அவர்கள்.**

**தமது அழகிய முகபாவங்களாலும் நளினமான நடிப்பாலும் ‘அபிநய சரஸ்வதி’ எனப் புகழப்பட்டவர். நான் பேச நினைப்பதெல்லாம் நீ பேச வேண்டும், கல்லெல்லாம் மாணிக்கக் கல்லாகுமா, உன்னை ஒன்று கேட்பேன், லவ் பேர்ட்ஸ், தொட்டால் பூ மலரும், ராஜாவின் பார்வை ராணியின் பக்கம் என எத்தனையோ இனிய பாடல்களுக்குத் தமது நடிப்பால் பொலிவூட்டி தமிழ் மக்களின் நெஞ்சினில் நீங்கா இடம் பிடித்திருப்பவர் சரோஜாதேவி அம்மையார் அவர்கள்.**

**சுமார் 200 திரைப்படங்களில் நடித்து, இந்தியத் திரையுலகிற்கு ஆற்றிய பங்களிப்புகளுக்காக பத்மஶ்ரீ, பத்மபூஷன், இந்திய அரசின் வாழ்நாள் சாதனையாளர் விருது, தமிழ்நாடு அரசின் கலைமாமணி விருது என எண்ணற்ற பெருமைகளைப் பெற்றவர். எப்போதும் இனிய முகத்துடனும், கனிவான பேச்சுடனும் காணப்படும் திருமதி சரோஜாதேவி அவர்களின் மறைவு எளிதில் ஈடு செய்ய முடியாதது.**

**அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், திரைத்துறையைச் சேர்ந்த நண்பர்களுக்கும், அவரது இரசிகர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் கூறியுள்ளார்.